

தஞ்சாவூர் மாவட்டம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ரூ.11.82 கோடி செலவில் 16 புதிய கட்டடங்கள் திறந்து வைத்து, ரூ.7.45 கோடி மதிப்பீட்டில் 13 புதிய கட்டடங்களை அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் நேற்று (11.05.2025) அடிக்கல் நாட்டினர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.பிரியங்கா பங்கஜம், எஸ்.கல்யாணசுந்தரம் எம்.பி., ச.முரசொலி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி.நீலமேகம் (துஞ்சாவூர்), என்.அசோக்குமார் (பேராவூரணி) தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன் , மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி (துஞ்சாவூர்), மாநகராட்சி ஆணையர் க.கண்ணன் , தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கோ.பாலசுப்பிரமணியன் , இணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.செல்வகுமார் , மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பா.கலைவாணி , மாநகர நல அலுவலர் மரு.நமச்சிவாயம் ஆகியோர் உடனிருந்தனர்.



கொளத்தூர் தொகுதி கோவலன் கலை மன்றம் நவீன் பைன் ஆர்ட்ஸ் சார்பில், கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நாலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆலோசனைபடி நடைபெற்ற இவ்விழாவில் கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், இறையன்பன் குத்தூஸ், ஆகியோர் நல உதவிகள் வழங்கினர். த.இளைய அருணா, இயக்குனர் மங்கை, அரிராஜன், எம்.ஜி.செல்வம்,அப்துல்மாலிக், குபேரன், ஐ.சி.எப்.பழனி, பி.எஸ்.என்.எல். தேவராஜ், வட்டச் செயலாளர்கள் பா.அன்பரசு, ஏ.பி.ஆதவன் மணி, ஆர்.ராஜன், நடிகர்கமலேஷ், நவோஜி, வி.எஸ்.நராயணா, எஸ்.ராஜா, எம்.ஜி.எஸ். செந்தில்குமார், கோவலன், விஜய், நவீன் பன்னீர் செல்வம், சாஜ் தாஜ் நாசர் உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# “அன்னம் தரும் அமுதகரம்” 81வது நாள்!

## துறைமுகம் கிழக்கு / மேற்கு பகுதிகளில் பகுதி செயலாளர்கள் எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி உணவு வழங்கினர்!





சென்னை,மே.12-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 81 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (11.5.2025) துறைமுகம் கிழக்கு பகுதி: 1) வட்டம் 56- ஆசிர்வாதபுரம், பிரகாசம் சாலை, பிராட்வே. 2) துறைமுகம் மேற்கு பகுதி, வட்டம் 54 அ - உட்வார்ப் 2வது கேட் வால்டேக்ஸ் ரோடு, சென்னை. ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி, பகுதி செயலாளர்கள் எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் பி.ஸ்ரீராமுலு, ஜி. எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ. அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன் ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் R.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம. அசோக்குமார், L.சம்பத்கு மார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! நாடு போற்றும் நான்காண்டு – தொடரட்டும் பல்லாண்டு!

# திரு.வி.க. நகர் வடக்குப் பகுதியில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## ஆர்.ஜெயசீலன் சிறப்புரை! செ.தமிழ்வேந்தன் தலைமை!

சென்னை, மே. 12-

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க நகர் வடக்கு பகுதி சார்பில் நலத்திட்டங்கள் நிரம்பிய நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு. சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் இன்று (12.05.2025 - திங்கட்கிழமை) மாலை 6.00 மணியவில், 71 (அ) வட்டம், ஈடன் கார்டன் ஜமாலியா, சென்னை - 12ல் நடைபெறுகிறது.

இப்பொதுக்கூட்டத்திற்கு பகுதிக் கழகச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் தலைமை வகிக்கிறார்.

தில்லை.கதிரவன், புல்லட் ரமேஷ், ஆர்.ராஜன், ஆறுமுகம், பி.புவனவதி, எஸ். புஷ்பராஜ், எம்.ஏ.டீக்கா, எம்.இசட். அபோய், ஜி.கிருஷ்ண குமார், பரிமளா சுரேஷ், வி.ஜெகன், சே.மணிமாறன் ஆகியோர் வரவேற்புரை யாற்றுகின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தலைவர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகிக்கிறார்.

இப்பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் ஆர்.ஜெயசீலன் சிறப்புரை யாற்றுகிறார்.

இதில் மேயர் ஆர். பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., எம்.சாமிக் கண்ணு, சரிதா மகேஷ்குமார் எம்.சி., தண்டலம் கிருஷ்ண மூர்த்தி,

புனிதவதி எத்திராசன் எம்.சி. இசட்.ஆசாத் எம்.சி., பி.உதயசங்கர், பி.ஜெ.துளசிங்கம் பெரம்பூர் ஆர். மகேஷ், இரா.வீரமணி, எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

71வது (அ) வட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறுகிறார்.

### சவுதி அரேபியா கிழக்கு மாகாணத்தில்

# கழக அயலக அணி புதிய பொறுப்பாளர்கள் அறிமுகக் கூட்டம்!

## எஸ்.கே.எஸ். சிக்கந்தர் பாபு – குண்டு பிலால் –அப்துல் சமது – முகம்மது ஷியா உல்ஹக் பங்கேற்பு!

சென்னை, மே 12-

சவுதி அரேபியா கிழக்கு மாகாண திராவிட முன்னேற்றக் கழக அயலக அணி புதிய பொறுப்பாளர்கள் அறிமுக கூட்டம், சவுதி அரேபியாவின் கிழக்கு மாகாணத்தில் உள்ள அஞ்சப்பர் ரெஸ்டாரண்டில் வைத்து 08.05.2025, வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற்றது.

கூட்டத்தில் திராவிட முன்னேற்ற கழக அயலக அணி புதிய அமைப்பாளர் எஸ்.கே.எஸ்.சிக்கந்தர் பாபு, துணை அமைப்பாளர்கள் குண்டு பிலால் (எ) அ.ஷேக் அப்துல் காதர், அப்துல் சமது மற்றும் முஹம்மது ஜியா உல்ஹக் ஆகியோர் தங்களை அறிமுகம் செய்து அயலக அணியின் செயல்பாடுகளை கழக உடன்பிறப்புகளுக்கு எடுத்துரைத்தனர்.

இக்கூட்டத்தில் வருகின்ற 2026 தமிழக சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. அதிகப்படியான தொகுதிகளில் போட்டியிட வேண்டும். இந்த முறை தி.மு.க.விற்கு கிடைக்க இருக்கும் இந்த வெற்றி கழகத்தின் பொற்கால ஆட்சிக்கு மக்கள் தரும் நற்சான்று என்பதை பொதுவெளியில் நாம் பகிர வேண்டும்.

சவுதி அரேபியாவில் இருக்கும் இந்திய தூதரகத்துடன் தொரபு கொள்ள சவுதி அரேபியாவின் மூன்று மாகாணங்களுக்கும் தனித்தனியாக ஆங்கிலம் மற்றும் இந்தி மொழி தெரிந்த தமிழர்களை தூதரக தொடர்பு மற்றும் குறை கேட்கும் அதிகாரிகளாக நியமிக்க வேண்டும், கல்வி அறிவு அதிகம் இல்லாத தமிழ் தொழிலாளர்கள் பாதிக்கப்படும் போது இடைத்தரகர்களால் ஏமாற்றப்படுவதும், பொருளாதார இழப்பு ஏற்படுவதையும் தடுக்க உதவும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக, இந்தியன் வெல்பேர் போரம் தம்மாம் மண்டல தலைவர் அப்துல் அலீம், சமூக சேவகி பரீதா, சமூக சேவகர் அப்துல் சத்தார், நாஞ்சில் மகேஷ், சலாஹுதீன், தி.சத்தியமூர்த்தி, துறையூர் த.சதீஸ், தங்கப்பன், மொகைதீன் பாஷா,வினோத், அசார், நிசார், எம்.எஸ்.யூ. அஜ்மல் கான், எம்.எம். முகமது அசாருதீன், பி.ரபீக், பி.சையது முஸ்தபா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




சவுதி அரேபியா கிழக்கு மாகாண தி.மு.க. அயலக அணி புதிய பொறுப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் சவுதி அஞ்சப்பர் ரெஸ்டாரண்டில் நடைபெற்றது. இதில் அமைப்பாளர் சிக்கந்தர் பாபு, துணை அமைப்பாளர்கள் குண்டு பிலால், அப்துல் சமது, முகம்மது ஜியா உல்ஹக் மற்றும் அப்துல் சலீம், பரீதா, அப்துல் சத்தார், நாஞ்சில் மகேஷ், சலாஷுதீன், தி.சத்தியமூர்த்தி, த.சதீஸ் தங்கப்பன், மொகிதீன் பாஷா, வினோத், அசார், நிசார், அஜ்மல்கான், முகமது அசாருதீன், ரபீக், பி.சையது முஸ்தபா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசின் மும்மொழித் திட்டம், தேசியக் கல்விக் கொள்கை திணிப்பைக் கண்டித்து

# மே 20 அன்று மாநிலம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடைபெற்ற திராவிட மாணவர் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!



சென்னை, மே 12 -

தேசிய கல்வி ஒழிப்பு, ‘நீட்’ தேர்வி லிருந்து தமிழ்நாட்டுக்கு விதிவிலக்கு, மாணவர்கள் மத்தியில் பரவிவரும் போதை ஒழிப்பு, ஜாதி-மத தாக்கத்திலிருந்து மாணவர்களை விடுவிப்பது உள்பட திராவிட மாணவர் கழக கூட்டத்தில் ஏழு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

11.05.2025 அன்று திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்கள் தலைமையில் சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற திராவிட மாணவர் கழக மாநிலக் கலந்துரையாடல் கூட்டத்தில் முன்மொழியப்பட்ட தீர்மானங்கள்:

நீட், தேசியக் கல்விக் கொள்கை, விஸ்வகர்மா யோஜனா என்று தொடர்ந்து சமூகநீதியைச் சவக்குழிக்கு அனுப்ப முயற்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் கொடுஞ்செயல்களை உடனுக்குடன் அடையாளம் கண்டு, அதற்கெதிரான அணியைத் திரட்டி, விழிப்புணர் வூட்டி, இந்தப் பாதிப்புகள் தமிழ்நாட்டு மாணவர்களை அண்டாமல் காத்து வரும் தமிழர் தலைவரின் அளப்பரிய உழைப்புக்குத் திராவிட மாணவர் கழகம் தனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறது. தந்தை பெரியாரின் அடியொற்றி, 80 ஆண்டுகளுக்கும் மேலான பொது வாழ்க்கை, 60 ஆண்டுகளுக்கும் மேலான விடுதலை ஆசிரியப் பணி, 48 ஆண்டுகளாகத் தொடரும் இயக்கத் தலைமை ஆகியவற்றால், தமிழ்நாடும், இந்தியாவெங்கும் வாழும் ஒடுக்கப்பட்ட, பிற்படு த்தப்பட்ட மக்கள் பெற்றுள்ள இட ஒதுக்கீடும், சமூகநீதி தொடர்பான விழிப்புணர்வும் வரலாற்றில் என்றும் நிலைக்கக் கூடியவை ஆகும். தொடரும் சவால்களை எதிர்கொள்ள தமிழர் தலைவரின் ஆணை ஏற்று, திராவிட மாணவர் கழகத்தின் செயல்பாடுகளைத் தீவிரமாக்கிட உழைப்பது என்று இக் கூட்டம் உறுதி யேற்கிறது.

#### முதலமைச்சருக்குப் பாராட்டு

தமிழ்நாட்டின் உயர்கல்வித் துறையை மறைமுகமாகக் கட்டுப்படுத்த முயன்ற தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடுகளை உச்சநீதிமன்றம் மூலம் தடுத்து, தமிழ்நாட்டின் கல்வி உரிமையையும், சமூகநீதியையும், பல்கலைக்கழகங்களின் உரிமையையும் மட்டுமல்லாமல், இந்திய மாநிலங்கள் அனைத்தின் உரிமையையும் மீட்டுள்ள தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுக்கு திராவிட மாணவர் கழகம் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது

தமிழ்நாட்டின் கல்விக் கூடங்களில் சமூகநீதியும், அறிவியல் மனப்பான்மையும் தான் முதன்மையாக இருக்க வேண்டும் என்று தமிழ்நாட்டின் முதல மைச்சர் அவர்கள் வழிகாட்டியுள்ளார். இவற்றையே மூச்சாகக் கொண்டு, கடந்த 90 ஆண்டுகளாக வெளிவரும் ‘விடுதலை’ நாளேட்டையும், ‘உண்மை’, ‘The Modern Rationalist’, ‘பெரியார் பிஞ்சு’ ஏடுகளையும் மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் கொண்டு செல்லுதல் இத்திசையில் பெரும் பயனை விளைவிக்கக் கூடியதாகும். தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறை சார்பில், அனைத்துப் பள்ளிகளிலும், நூலகங்களிலும் இவ்வேடுகள் கிடைக்கச் செய்ய வேண்டுமென இக் கூட்டம் தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

2025--2026 ஆம் ஆண்டுக்கான திராவிட மாணவர் கழகத்தின் செயல் திட்டங்கள்:

(i) திராவிட மாணவர் கழகம் சார்பில் பள்ளி, கல்லூரிகளில் துண்டறிக்கை பிரச்சாரம் மேற்கொள்வது.

(ii) அனைத்து மாவட்டங்களிலும் கல்லூரி, பள்ளி, கல்வி நிலையங்கள் அருகில் திராவிட மாணவர் கழகத்தில் இணைய அழைப்பு விடுத்து “JOIN DSF” சுவர் எழுத்து பிரச்சாரம் செய்வது.

(iii) கல்லூரி மாணவர்கள் சந்திப்புக் கூட்டத்தை நடத்துவது.

(iv) திராவிட மாணவர் கழக உறுப்பினர் சேர்க்கையை மேற்கொள்வது.

(v) அனைத்து மாவட்டத்திலும் திராவிட மாணவர் கழகப் பொறுப்பாளர்கள், தோழர்களுக்குச் சமூக ஊடகப் பயிற்சி அளிப்பது.

(vi) உலகின் ஒரே பகுத்தறிவு நாளேடான ‘விடுதலை’ நாளிதழை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் விதமாக PDF மூலமாக மாணவர்கள் மத்தியில் அனுப்பி பிரச்சாரம் செய்வது.

(vii) 1925-2025 நூற்றாண்டு காணும் சுயமரியாதை இயக்க வரலாறு, குடிஅரசு இதழ் வரலாறு ஆகிய இரு பொருளைக் கொண்டு பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கருத்தரங்கம், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி நடத்துவது.

#### போதை ஒழிப்பு விழிப்புணர்வுப் பிரச்சாரம்

பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மாணவர்களின் கவனத்தைச் சிதைத்து, வாழ்க்கையை அழிக்கும் பல்வேறு போதைகள் நம்மைச் சூழ்ந்திருப்பதை இக் கூட்டம் மிகுந்த கவலையுடன் கவனத்தில் கொள்கிறது. மதம், ஜாதி, பதவி, சினிமா, சமூக ஊடகம், புகை, மது, மருந்து போதைகள் மாணவர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை உண்டாக்கி வருகின்றன. திராவிட மாணவர் கழகம் போதை ஒழிப்புப் பிரச்சாரத்தைத் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு காலகட்டங்களில் முன்னெடுத்துள்ளது.

மனிதருக்கு இருக்க வேண்டிய அடிப்படைக் குணமான சுயமரியா தையை இல்லா தொழிப்பதில் போதைப் பழக்கங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா நடக்கும் இக் காலகட்டத்தில், நம் மாணவர்களின் சுயமரியாதை பாதிக்கப்படாமல் காக்க, மீண்டும் அதே போன்று, பள்ளி, கல்லூரிகளில் போதை ஒழிப்பு விழிப்புணர்வுப் பிரச்சா ரத்தை மாணவர்களை ஈர்க்கக் கூடிய வகையில் கல்வி நிலையங்களிலும், மாணவர்கள் பெரிதும் வசிக்கும் இடங்களிலும் நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், கலந்துரையாடல்கள், பல்துறைப் போட்டிகள், வழிகாட்டல் முகாம்கள், துண்டறிக்கை, குறுங்காணொலிகள், திரையிடல்கள் ஆகியவற்றின் மூலம் தனித்துவத்துடன் ஆண்டு முழுவதும் போதை ஒழிப்புப் பிரச்சாரத்தை நடத்துவது என்று தீர்மானி க்கப்படுகிறது. இந்தப் பிரச்சாரத்தில் மாணவர் கழகத் தோழர்கள் அதிக அளவில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள முன்வரவேண்டுமென்று இக் கூட்டம் அழைப்பு விடுக்கிறது.

ஜாதி, மத உணர்வைத் தூண்டும் விதமாகச் செயல்படும் அமைப்புகளை எக் காரணம் கொண்டும் மாணவர்களை அணுகவிடாமல் தடுப்பதும், மாணவர்களிடம் இத்தகைய உணர்வுகள் தலையெடுக்காமல் விழிப்புணர்வூட்டு வதும் மிகுந்த கவனத்துடன் செய்யப்பட வேண்டிய பணிகளாகும். சமூகநீதி, சமத்துவம், சமூக நல்லிணக்கத்துக்காக உழைக்கும் அனைத்து அமைப்புகளும், அரசும், குறிப்பாக காவல்துறையும், கல்வித்துறையும் இப் பிரச்சினையில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் இக் கூட்டம் அழைப்பு விடுக்கிறது.

#### தமிழர் தலைவரின் ஆணையேற்போம்! போராட்டக் களம் காண்போம்!

நீட் தேர்வால் தற்கொலைகள் தொடர்வதும், மாணவர்களும், பெற்றோரும் அலைக்கழிக்கப்படுவதும் நாளும் தொடர்கதையாகி வருகிறது. மருத்துவக் கல்வியையும், கட்டமைப்பையும் சிதைக்கும் நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்களிக்கும் சட்டம் தமிழ்நாடு சட்டப்பேரவையில் இருமுறை நிறைவேற்றி அனுப்பப்பட்டும், அதற்கு ஒப்புதல் அளிக்காமல் இழுத்தடிக்கும் ஒன்றிய அரசின் செயல்பாடுகள் மாநில உரிமைக்கும், அரசமைப்புச் சட்டத்துக்கும், உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகளுக்கும் விரோதமானவையாகும். நீட் தேர்வு ஒழிப்புப் போர் கடந்த 9 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து வருகிறது. இறுதி வெற்றி கிட்டும் வரை சற்றும் ஓயாமல், அயராமல் போராடி, நீட்டை ஒழித்து, சமூகநீதியையும் மாநில உரிமையையும் மீட்க தமிழர் தலைவரின் ஆணையேற்க இக் கூட்டம் உறுதி பூணுகிறது.

மும்மொழிக் கொள்கையையும், தேசியக் கல்விக் கொள்கையையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு திணிப்ப தைக் கண்டித்து, திராவிடர் கழக இளைஞரணி, திராவிட மாணவர் கழகம் ஆகியவை இணைந்து மாநிலம் முழுவதும் மே 20 அன்று கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### மா.பா.அன்புதுரை தலைமை! நே.சிற்றரசு முன்னிலை!

# ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதியில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## கொரஞ்சூர் எஸ்.முத்துசாமி - க.ஹேமநாதன் - தயாநிதிமாறன் எம்.பி. சிறப்புரை!

சென்னை, மே 12

“நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு!” - ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் இன்று (12.5.2025-திங்கள்) மாலை 6 மணிக்கு 117வது ‘அ’ வட்டம், விஜயராகவாச்சாரி சாலை, அண்ணா அறிவாலயம் எதிரில் நடைபெறுகிறது.

இப்பொதுக்கூட்டத்திற்கு பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை தலைமை வகிக்கிறார்.

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு முன்னிலை வகிக்கிறார். எம்.ஆர்.ஜம்புலிங்கம், கோ.ரவி, மு.வெங்கடேசன், டி.வைலட் மேரி, எம்.ஜெயக்குமார், திருமலை பொன்னுரங்கம் ஆகியோர் வரவேற்கின்றனர். இப்பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் சொரஞ்சூர் எஸ். முனுசாமி, க.ஹேமநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., தொகுதி மேற்பார்வையாளர் வெ.கௌதமன், நுங்கை வி. எஸ்.ராஜ், து.விக்டர், ஆர். என்.துரை, வி.எஸ். கலைச்செல்வன், ஆ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, ஆர்.பாபு, எப். பீட்டர்ஜான், ப.மகேஷ், த.தேவராஜ், எம். என்.விஷ்ணு, கோ.யுவராஜ், எஸ்.என்.கே.ராமன்,

ஜெ.நற்குணநாதன், பா.ராபர்ட், எம்.வெற்றி செல்வி, அழகிரி சதாசிவம், எஸ்.எம்.கே.அண்ணாதுரை, வழக்கறிஞர் பா.பிரகாஷ், துபாய் வி.ஆர்.விஜய், மு. செந்தில்குமார், யோகேஸ்வரி சுந்தரேசன், டி.கே.லதா, பிளாரன்ஸ், ச.அசோக் குமார், வே. தேவேந்திரன், மு.சீனிவாசன், ஜி.வி.சரவணன், எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன், டி.எஸ்.ராஜா, சி.கே.ரெங்கராஜ், எம். ஏ.நந்தினி, மல்லிகா யுவராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்கின்றனர்.

தேனா எல்.தவமணி, எஸ். சத்திய பெருமாள் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



சென்னை மாநகராட்சி ஈஞ்சம்பாக்கம் 194 வது வார்டு தெற்கு பெத்தேல் நகர் பகுதி மக்கள் கவுன்சிலர் கே.விமலா கர்ணாவிடம் அடிபம்பு வேண்டி கோரிக்கை விடுத்துள்ளனர். பொதுமக்களின் கோரிக்கையின் பேரில் 12 இடங்களில் அடி பம்புகள் அமைக்கப்பட்டுள்ளது. அதனை மக்கள் பயன்பாட்டிற்கு கவுன்சிலர் விமலா கர்ணா துவக்கி வைத்தார். பின்னர் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். இதில் 194 வது (அ) வட்ட திமுக செயலாளர் குங்ஃபூ மாஸ்டர் எஸ்.கர்ணா மற்றும் வட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.